**த. நா.ச.பே. எண் : 004** **நாள் : 15.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (15.3.2018) காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்தார்கள்.**

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

காவேரி நதிநீர்ப் பிரச்சனை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சனையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது.

காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரங்களும் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இம்மாமன்றத்தில் முன்மொழிகிறேன்.

**<u>தீர்மானம்</u>**

**“காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று இந்த மாமன்றம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.”**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தினை ஒரு மனதாக நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**